# ஆங்கிலத்தை ஒரு மேலதிக மொழியாக அல்லது பிராந்திய மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான எழுத்துமூல அறிக்கைகள்

## பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கான தகவல்கள்

அன்பின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு

உங்களுடைய பிள்ளையின் பாடசாலையிலிருந்து ஆண்டு தோறும் இரண்டு எழுத்துமூல அறிக்கைகளை நீங்கள் பெறுவீர்கள். உங்களது பிள்ளையினுடைய முன்னேற்றம் எவ்வாறு அமைந்துள்ளது, மற்றும் உங்களது பிள்ளையின் கற்றலுக்கு உங்களது பாடசாலை எவ்வாறு ஆதரவு வழங்குகின்றது என்பவை தொடர்பாக அறிந்து கொள்ள இந்த அறிக்கைகள் உங்களுக்கு உதவும். இந்த அறிக்கையானது சகல பாடங்களிலும் உங்களுடைய பிள்ளையின் முன்னேற்றத்தினைக் காண்பிப்பதாக அமையும்.

### ஆங்கிலத்தை ஒரு மேலதிக மொழியாக அல்லது பிராந்திய மொழியாக (English as an additional language or dialect (EAL/D)) கற்கும் அனைத்து மாணவர்களுக்குமான அறிக்கைகள்

உங்களுடைய பிள்ளை ஆங்கிலத்தை ஒரு மேலதிக மொழியாக அல்லது பிராந்திய மொழியாகக் கற்பவராயின், இந்த அறிக்கையானது உங்களது பிள்ளையின் ஆங்கிலமொழிக் கல்வியிலான முன்னேற்றத்தையும், மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சியில் அவர்களுடைய தற்போதைய கட்டத்தையும் காட்டுவதாக அமையும். இக் கட்டங்கள் தொடக்கநிலை, வளர்நிலை, விருத்திநிலை அல்லது திடநிலை ஆகியனவாகும். இக் கட்டங்கள் பற்றிய விளக்கங்களுக்கு தயவு செய்து மறுபக்கத்தினைப் பார்க்கவும்.

### EAL/D திட்டமொன்றில் உள்ள மாணவர்களுக்கான அறிக்கைகள்

உங்களுடைய பிள்ளை EAL/D திட்டம் ஒன்றில் இருப்பவராயின், அவர் தன்னுடைய EAL/D ஆசிரியரிடமிருந்து ஒரு மேலதிக எழுத்துமூல அறிக்கையினைப் பெறுவார். இவ்வறிக்கையானது, ஆங்கில மொழியைக் கற்பதில் அவருடைய முன்னேற்றம் சம்பந்தமான தகவல்களையும் உள்ளடக்கியதாக அமையும்.

### புதிதாக வந்த EAL/D மாணவர்களுக்கான அறிக்கைகள்

உங்களுடைய பிள்ளை EAL/D திட்டம் ஒன்றில் இருப்பதுடன், மேலும் அவுஸ்திரேலியப் பாடசாலை ஒன்றில் நான்கு பருவங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருந்திருந்தால், உங்களுடைய பிள்ளையின் எழுத்துமூல அறிக்கையானது ஆங்கிலத்தைக் கற்பதில் அவருடைய முன்னேற்றம் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதுடன், அவர் கற்றுக் கொண்டிருக்கும் பிற பாடங்களில் அவருடைய முன்னேற்றம் தொடர்பான தகவல்களையும் கொண்டிருக்கும். இக் கட்டத்தில் இத் தகவல்கள் ஒரு தரக் குறியீடாக அமைவதைவிட, ஒரு கருத்துக் கூறலாக அமையும்.

### தீவிர ஆங்கிலக் கல்வி நிலையங்கள் அல்லது தீவிர ஆங்கில உயர்நிலைப் பாடசாலைகளுக்குப் புதிதாக வந்த EAL/D மாணவர்களுக்கான அறிக்கைகள்

உங்களுடைய பிள்ளை தீவிர ஆங்கிலக் கல்வி நிலையமொன்றில் அல்லது தீவிர ஆங்கில உயர்நிலைப் பாடசாலையொன்றில் சேர்ந்திருப்பவராயின், ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதில் அவருடைய முன்னேற்றம் தொடர்பான ஓர் எழுத்துமூல அறிக்கையினை நீங்கள் பெறுவீர்கள். அத்துடன், உயர்நிலைப் பாடசாலைக்குத் தயார்ப்படுத்துவதற்காகக் கற்ற சகல பாடங்களிலுமான முன்னேற்றத்தினையும் இவ்வறிக்கையானது காட்டும்.

| ஆங்கில மொழித் தேர்ச்சிக் கட்டங்கள் | |
|---|---|
| **தொடக்கநிலை** | தொடக்கநிலைக் கட்டத்தில் உள்ள மாணவர்கள், ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். அவர்களால் ஆங்கிலம் தவிர வேறு ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேச முடியும். அத்துடன் அவர்கள் அவர்களுடைய முதன்மொழியில் வயதுக்குப் பொருத்தமான எழுத்தறிவு மட்டத்தினைப் பெற்றிருக்கலாம். இந்த மாணவர்கள் பாடத்திட்டத்திலுள்ள இலகுவான மொழிக் கல்விப் பயிற்சிகளில் ஈடுபாடு கொள்ளத் தொடங்குகிறார்கள். |
| **வளர்நிலை** | வளர்நிலைக் கட்டத்தில் உள்ள மாணவர்களது ஆங்கில அறிவு வளர்ந்துவரும் நிலையில் இருக்கும். இம் மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலம் உள்ளடங்கலாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் பேசுவதற்கு முடியும். அத்துடன், எழுத்து மூல ஆங்கிலம் சம்பந்தமான அறிவிலும் வளர்ச்சி காணப்படும். இந்த மாணவர்களுக்கு பொருத்தமான மொழிக் கற்பித்தலும், இன்னும் வகுப்பறைச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு மேலதிக நேரமும் வழங்கப்படுமிடத்து, கல்வி வேலைகளில் இவர்களால் ஈடுபட இயலும். |
| **விருத்திநிலை** | விருத்திநிலைக் கட்டத்தில் உள்ள மாணவர்கள் செயற்பாட்டு ஆங்கிலம் உட்பட, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் பேசக் கூடியவர்களாகக் காணப்படுவர். அத்துடன் எழுத்து மூல ஆங்கிலத்திலும் இவர்களது அறிவு விருத்தியடைந்துவரும். இம்மாணவர்கள் வகுப்பறை மற்றும் வழமையான பாடசாலை செயற்பாடுகளில் சுறுசுறுப்பாய்ப் பங்குபற்றுபவர்களாக இருப்பதுடன், கற்றல் நடவடிக்கைகளிலும் அதிகரித்துவரும் வெற்றியுடன் ஈடுபடுபவர்களாக இருப்பர். அவர்கள் ஆங்கிலமொழி இலக்கணத்தை சரியாகப் பயன்படுத்துவதில் முன்னேறி, சொற்களஞ்சியத்தினையும் வளர்த்துக் கொள்ளும் அதேவேளையில் அவர்களுடைய முதன்மொழியானது ஒரு பெறுமதி வாய்ந்த உறுதுணையாக அவர்களுக்குத் தொடர்ந்தும் செயற்பட்டு வரும். |
| **திடநிலை** | திடநிலைக் கட்டத்தில் உள்ள மாணவர்களால் ஆங்கிலம் உட்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் பேசுவதற்கு முடியும். அத்துடன் எழுத்துமூல ஆங்கிலத்திலும் அவர்களிடம் சிறந்த அறிவு காணப்படும். இம்மாணவர்கள் வகுப்பறை மற்றும் பாடசாலைச் செயற்பாடுகளில் சுயாதீன பங்குபற்றுபனர்களாக இருப்பதுடன், பொதுவாக வெற்றிகரமான முறையில் கற்றலில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் திறன் இவர்களிடம் அதிகரித்துவரும். பல்வேறு குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பேச்சு மூல மற்றும் எழுத்து மூல வெளிப்பாடுகளை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாகவும், அவற்றை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும் இவர்கள் இருப்பர். ஆயினும் இவர்கள் பயிலும் பாடங்களில் கல்விசார் மொழிக்கான தேவை அதிகரித்து வருவதால், கவனக்குவிவோடு கூடிய EAL/D போதனையும் ஆதரவு உத்திகளும் இவர்களுக்குத் தேவைப்படும். |

## தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

மேலதிகத் தகவல்களைப் பெற விரும்பினால், தயவு செய்து பாடசாலையைத் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் பாடசாலையைத் தொடர்பு கொள்வதற்கு உங்களுக்கு உதவி செய்ய ஓர் உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தயவு செய்து 131 450 என்ற தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையினை (TIS) அழைத்து, உங்களுடைய மொழியிலான ஓர் உரைபெயர்ப்பாளர் வேண்டுமெனக் கேளுங்கள். அந்த உரைபெயர்ப்பாளர் பாடசாலையைத் தொலைபேசி மூலம் அழைத்து உரையாடலில் உதவி செய்வதற்காக அழைப்பில் காத்திருப்பார். இச் சேவைக்காக உங்களிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது.